අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා
වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education,Higher Education and vocational Education

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) උපකාරක තක්සේරුව - 2026

கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர) உதவி மதிப்பீடு - 2026

General Certificate of Education (Ord. Level) Supportive Assessment - 2026

வரலாறு

History - **ඉතිහාසය**

உதவி மதிப்பீடு
උපකාරක තක්සේරුව
Supportive Assessment

மொழிமூலம் - தமிழ்



Question Paper – I ,II வினாப்பத்திரம் - I

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
ජාතික භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව
கல்வி. உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை

Past Papers Wiki

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය

கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

Ministry of Education,Higher Education and vocational Education

33	T	I

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) උපකාරක තක්සේරුව - 2026

கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர) உதவி மதிப்பீடு - 2026

General Certificate of Education (Ord. Level) Supportive Assessment - 2026

වරලාරු I

ඉතිහාසය I

History I

ஒரு மணித்தியாலம்

පැය එකයි

One hour

அறிவுறுத்தல்கள்:

- எல்லா வினாக்களுக்கும் விடையெழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடைக்குரிய இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

1. இலங்கையின் பௌத்த சாசன வளர்ச்சிப் பற்றி கற்பதற்கு உதவும் நூல் எது?
   (1) ராஜாவலிய (2) போதிவம்சம்
   (3) நிகாய சங்கிரஹய (4) பூஜாவலிய

2. கண்டி இராசதானிக் காலத்தில் சிறைக்கைதியாக இருந்து தனது அனுபவங்களினூடாக இலங்கைப் பற்றிய தகவல்களை எழுதிய ஆங்கிலேய எழுத்தாளர் யார்?
   (1) ரிபைரோ (2) ரொபட் நொக்ஸ் (3) ஜோன் டொயிலி (4) பிலிப் பல்டியஸ்

3. பண்டைய காலத்தில் மீனவர்கள் வாழ்ந்த கிராமம் எவ்வாறு அழைக்கப்பட்டது?
   (1) ஒலகம் (2) கசீகாரகாம (3) பட்டானகாம (4) கேவட்டகாம

4. இல்லத் தலைவர்களில் இருந்து கமிக தெரிவுசெய்யப்பட்டதாக குறிப்பிடும் நூலின் நூலாசிரியர் யார்?
   (1) புத்தகோச தேரர் (2) மகாநாம தேரர்
   (3) பாகியன் தேரர் (4) ஹியுங்சாங் தேரர்

5. **நரேஸ்வர** எனும் பெயரில் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட மன்னன் யார்?
   (1) முதலாம் காசியப்பன் (2) நிசங்கமல்லன்
   (3) குட்டகண்ண அபயன் (4) மகாசேனன்

6. கீழே தரப்பட்டுள்ளனவற்றுள் உள்நாட்டு நிர்வாகத்தை முறையாகக் கட்டியெழுப்புவதற்காக வசப மன்னன் மேற்கொண்ட பிரதான நடவடிக்கை எது?

   (1) பாரிய குளங்களை நிர்மாணிக்கும் பணியை ஆரம்பித்தமை
   (2) நாட்டை நிர்வாக அலகுகளாகப் பிரித்தமை
   (3) அயல்நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளைப் பேணியமை
   (4) அநுராதபுரத்தை திட்டமிட்ட நகரமாக மாற்றியமை

7. கீழே நிரல் I இல் மன்னர்கள் சிலரது பெயர்களும் நிரல் II இல் அவர்களுடன் தொடர்புடைய வரலாற்று நிகழ்வுகளும் தரப்பட்டுள்ளன. நிரல் I இற்கு பொருத்தமான வகையில் நிரல் II இனை தொடர்புபடுத்தும் போது பெறப்படும் சரியான விடையாக அமைவது

நிரல் I	நிரல் II
1. ஆறாம் அக்போ 2. முதலாம் கஜபாகு 3. பாதிகாபயன்	A. பத்தினி கோயில் திறப்பு விழாவில் கலந்துகொண்டமை B. எகிப்து நாட்டிற்கு தூதுக்குழுவை அனுப்பியமை C. சீனாவுடன் இருபது தடவைகள் இராஜதந்திர தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டமை D. கண்ணாடிப் பவளங்கள் கொண்டுவரப்பட்டமை

(1) BCD (2) CDB (3) CAD (4) DCB

8. அரேபிய நாட்டு வரலாற்றியலாளரான அல் பலசூரி இலங்கையை எப்பெயரில் குறிப்பிட்டுள்ளார்?
(1) சிவப்புத்தீவு (2) செரண்டிப்
(3) இரத்தின துவீபம் (4) செய்லான்

9. பண்டைய பௌத்த ஆராமைகளில் தலைமை பிக்குவின் கீழ் வாழ்ந்த ஏனைய பிக்குமார் எவ்வாறு அழைக்கப்பட்டனர் ?
(1) பாணக (2) அந்தேவாசி (3) தேரர் (4) சதிவிஹகரிய

10. பண்டைய சமூகத்தில் குளத்தொகுதி ஒன்றுக்கு பொறுப்பான அதிகாரி எப்பெயரில் அழைக்கப்பட்டார்?
(1) குர்ஹபதி (2) கமிக
(3) தசகம் எத்தன் (4) பருமக

11. மாந்தோட்ட துறைமுகத்துக்கு அருகில் அமைந்துள்ள பிரசித்தம் பெற்ற இந்துக் கோயில் எது?
(1) திருக்கோணேஸ்வரம் (2) திருக்கேதீஸ்வரம்
(3) முன்னேஸ்வரம் (4) நல்லூர் கந்தசுவாமி கோயில்

- **கீழே A தொடக்கம் E வரை தரப்பட்டுள்ள கூற்றுகளை வாசித்து விளங்கி வினா இல 12,13 ஆகியவற்றிற்கு விடையளிக்குக.**

A. நவீன கொங்ரீட் தொழினுட்பத்துக்கு இணையான அத்திவாரம் இடப்பட்டமை
B. நீர் நிலையியற் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளமை
C. இடிமின்னலிலிருந்து பாதுகாப்புப்பெற இடிதாங்கி பொருத்தப்பட்டிருந்தமை
D. வெண்கலத்தால் ஆக்கப்பட்டிருந்தமை
E. **யகட மரங்** எனும் தாவரத்தின் கரியைப் பயன்படுத்தியமை

12. ருவன்வெலிசாய தூபியின் நிர்மாணிப்போடு தொடர்புடைய விடயங்களை உள்ளடக்கியுள்ள விடை யாது?
(1) AC (2) AD (3) BC (4) BE

13. தெடிகம யானைவிளக்குடன் தொடர்புடைய விடயங்களை உள்ளடக்கியுள்ள விடை யாது?

(1) AC (2) BD (3) BE (4) CD

14. கிறிஸ்துவுக்கு முன் 2400 என கால நிர்ணயம் செய்யப்பட்ட சூளையின் ஒரு பகுதி கண்டுபிடிக்கப்பட்ட மயானம் எது ?

(1) பெரகல (2) ஹல்துமுல்ல (3) தெஹிகஹ எலகந்த (4) சமனலவெவ

15. போவத்தேகல கல்வெட்டில் குறிப்பிடப்படும் **"காம்போஜ மகா புகிய"** எனும் வர்த்தக அமைப்பு எந்த நாட்டவருக்குரியது?

(1) கிரேக்கம் (2) மெசிடோனியா (3) ஆப்கானிஸ்தான் (4) கம்போடியா

16. மிருகங்களை எவரும் கொல்லக்கூடாது எனும் படுகொலைச் சட்டத்தை முதன்முதலில் பிறப்பித்த மன்னன் யார்?

(1) நான்காம் மகிந்தன்
(2) பாதிகாபயன்
(3) கீர்த்தி ஸ்ரீ மேகவர்ணன்
(4) ஆமண்டகாமினி அபயன்

17. இலங்கையின் இராசதானிகள் சில நிரல் I இலும் அந்த இராசதானிகள் காலத்தில் எழுதப்பட்ட நூல்களில் சில நிரல் II இலும் தரப்பட்டுள்ளன. அவ்விரு நிரல்களையும் மிகச்சரியாக தொடர்புபடுத்தும் போது பெறப்படும் விடையாக அமைவது எது?

நிரல் I	நிரல் II
1. தம்பதெனியா	A. தலதா சிரித
2. குருநாகல்	B. மயுர சந்தேசய
3. கம்பளை	C. சத்தர்மரத்னாவலிய
	D. சத்தர்மரத்னாகரய

(1) ABD (2) ACD (3) BCA (4) CAB

18. பின்வரும் எவ்விராசதானி காலத்தில் தாய்வழி அரசுரிமை முறை நடைமுறையிலிருந்தது?

(1) யாப்பகூவ
(2) குருநாகல்
(3) கம்பளை
(4) கோட்டை

19. கண்டி இராசதானிக் காலத்தில் மடிகே பத்த எனும் வரி எதற்காக அறவிடப்பட்டது?

(1) மட்பாண்ட உற்பத்தி
(2) போக்குவரத்து நடவடிக்கை
(3) யானைப் பிடித்தல்
(4) புடவை நெய்தல்

20. கீழே தரப்பட்டுள்ளனவற்றுள் **நிந்தகம்** பற்றிய சரியான கூற்றாக அமைவது எது?
(1) அரச மாளிகைக்காக பயன்படுத்தப்பட்ட நிலம்
(2) கிராமத்தவர்கள் பரம்பரையாக அனுபவித்த நிலம்
(3) விகாரைகளுக்கு தானமளிக்கப்பட்ட நிலம்
(4) பிரதானிகளின் சேவைக்காக வழங்கப்பட்ட நிலம்

21. மறுமலர்ச்சிக் காலத்தில் பெரும் மாற்றத்துக்கு உள்ளான கலைத்துறை எது?
(1) கட்டடநிர்மாணம்
(2) சித்திரக்கலை
(3) சிற்பக்கலை
(4) செதுக்கற்கலை

22. கி. பி. 1505 இல் போர்த்துக்கேய மன்னனால் கீழைத்தேய இராசப்பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர் யார்?
(1) லோரன்சோ டி அல்மேதா
(2) பேரோ லோபேஸ்த சூசா
(3) பிரான்சிஸ்கோ டி அல்மேதா
(4) கொன்ஸ்தாந்தினு த சா

23. பின்வருவனவற்றுள் யாழ்ப்பாண இராச்சியம் பற்றிய சரியான கூற்றாக அமைவது எது?
(1) புவிராச பண்டாரம் முதல் ஆட்சியாளராவார்
(2) ஆரியச் சக்கரவர்த்திகள், கோட்டை இராசதானியிடமிருந்து வரி அறவிட்டுள்ளனர்
(3) யாழ்ப்பாண ஆட்சியாளர்கள் பன்னிருவர் பற்றி யாழ்ப்பாண வைபவமாலையில் குறிப்பிடப்பட்டுள்ளது
(4) போர்த்துக்கேயரது வருகையின்போது யாழ்ப்பாணத்திலிருந்த ஆட்சியாளன் சங்கிலி மன்னனாவான்

24. கொழும்பிலிருந்து கண்டி வரையான புகையிரதப் பாதையை நிர்மாணிக்க நடவடிக்கைகளை மேற்கொண்ட ஆளுநர் யார்?
(1) ஹென்றி வோட்
(2) எட்வட் பாண்ஸ்
(3) டொரிங்டன்
(4) பிரட்றிக் நோர்த்

25. கி. பி. 1818ஆம் ஆண்டு முதலாம் சுதந்திரப் போராட்டத்தின் போது ஆங்கிலேயருக்குச் சார்பாக செயற்பட்ட பிரதானி யார்?
(1) மொல்லிகொட திசாவை
(2) பூட்டாவே ரட்டேரால
(3) எஹலபொல அதிகாரம்
(4) தம்பவின்ன திசாவை

26. கீழே A தொடக்கம் D வரை தரப்பட்டுள்ள வெளியீடுகளுள் மிஷனரி இயக்கத்தினால் அச்சிடப்பட்ட வெளியீடுகளை மாத்திரம் உள்ளடக்கிய விடையாக அமைவது எது?
A – உரகல B – உதயபானு C – லக்மினி பஹன D – லங்கா நிதானய

(1) AC (2) AD (3) BC (4) CD

27. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன் காலத்தில் கண்டி இராசதானிக்கு வருகைதந்த ஆங்கிலேயத் தூதுவர் யார்?
(1) ஜோன் பைபஸ் (2) ஜோன் டொயிலி (3) ஹியு பொயிட் (4) ரொபட் அன்ட்றூஸ்

28. இலங்கையில் நிறுவப்பட்ட முதல் பௌத்த அச்சகம் எது?
(1) லங்கா பிநவ விஷ்ரத (2) சுதர்ஷன
(3) லங்கோபகார (4) சரசவி சந்தரெஸ

29. இஸ்லாமிய சமய மறுமலர்ச்சிக்கு தலைமைத்துவம் வழங்கிய ஓராபி பாஷா எந்த நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்தார்?
(1) அரேபியா (2) ஆப்கானிஸ்தான் (3) பாரசீகம் (4) எகிப்து

30. தமிழ் மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வியை வழங்குவதற்காக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கையாக அமைவது எது?
(1) சைவப்பிரகாச வித்தியாசாலை ஆரம்பிக்கப்பட்டமை
(2) உதயபானு பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டமை
(3) சைவ ஆங்கில வித்தியாசாலை ஆரம்பிக்கப்பட்டமை
(4) வண்ணார்பண்ணையில் அச்சகமொன்று நிறுவப்பட்டமை

31. இலங்கையர் சங்கத்தை நிறுவுவதற்கு தலைமைத்துவம் வழங்கியவர் யார்?
(1) சேர் பொன்னம்பலம் அருணாச்சலம் (2) சேர் ஜேம்ஸ் பீரிஸ்
(3) ஹென்றி மெக்கலம் (4) ஜோர்ஜ் வோல்

32. வரையறுக்கப்பட்ட வாக்குரிமையை இலங்கைக்கு அறிமுகம் செய்த யாப்புச் சீர்திருத்தம் எது?
(1) கோல்புறூக் (2) குறூ மக்கலம் (3) மனிங் (4) டொனமூர்

33. டொனமூர் யாப்பில் அரசுக் கழகத்தின் தலைவராகச் செயற்பட்டவர் யார்?
(1) ஆளுநர் (2) ஆளுநர் நாயகம் (3) சபாநாயகர் (4) பிரதமர்

34. இலங்கையில் தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது?
(1) தலவாக்கலை (2) லுணுவில (3) அகலவத்தை (4) கன்னோருவை

- கீழே தரப்பட்டுள்ள A,B கூற்றுகளை அடிப்படையாகக் கொண்டு வினா இல 35 இற்கு விடை தருக
A. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வெற்றி பெற்றமை
B. சிங்களம் அரசகரும மொழியாக்கப்பட்டமை

35. கி.பி. 1956ஆம் ஆண்டு தேர்தல் பற்றிய சரியான கூற்றாக அமைவது எது?
(1) A உண்மையானது B உண்மையற்றது (2) A உண்மையற்றது B உண்மையானது
(3) A,B கூற்றுகள் உண்மையானவை (4) A,B கூற்றுகள் உண்மையற்றவை

36. வட அமெரிக்க பிரதேசங்களில் குடியேற்றங்களை அமைத்த ஐரோப்பிய இனத்தவர்கள் யாவர்?
(1) ஸ்பானியர், போர்த்துக்கேயர் (2) போர்த்துக்கேயர், பிரித்தானியர்
(3) பிரான்சியர், ஒல்லாந்தர் (4) பிரித்தானியர், பிரான்சியர்

37. பின்வருவனவற்றுள் பிரான்சிய புரட்சிக்கு வித்திட்ட பொருளாதாரக் காரணியாக **அமையாதது** எது?
(1) பிரபுக்களுக்கு நாட்டின் எப்பகுதியிலும் வேட்டையாட அனுமதி வழங்கப்பட்டிருந்தமை
(2) தேவையற்ற யுத்த செலவு
(3) பொருத்தமற்ற வரிக் கொள்கை
(4) அரச குடும்பத்தினரின் ஆடம்பர வாழ்க்கைச் செலவு

- **கீழே ABCD என கருத்துச் சோடிகள் தரப்பட்டுள்ளன. சோடி ஒன்றில் தரப்பட்டுள்ள முதலாம் இரண்டாம் கருத்துகளுக்கிடையேயான தொடர்பினைப் பரிசீலனை செய்து 37 – 40 வரையான வினாக்களுக்கு விடை தருக**

A – 1 – முதலாம் உலகப்போர்
2 – வேர்செல்ஸ் ஒப்பந்தம்

B - 1 - பரிஸ் சமாதான பேச்சுவார்த்தை
2 - ஐக்கிய நாடுகள் சபை

C – 1 - மத்திய ஐரோப்பிய வல்லரசுகளின் தோல்வி
2 - நட்பு நாடுகளுக்கு அமெரிக்கா ஆதரவு வழங்கியமை

D - 1 – பொதுச்சபை
2 – செயலாளர் நாயகம் தெரிவு

38. முதலாவதிற்கும் இரண்டாவதிற்கும் இடையே தொடர்பின்மையைக் காட்டும் சோடி

(1) A (2) B (3) C (4) D

39. இரண்டாவது முதலாவதன் விளைவாக அமையும் சோடி

(1) A (2) B (3) C (4) D

40. முதலாவதற்கு இரண்டாவது காரணமாக அமைவதைக் குறிக்கும் சோடி

(1) A (2) B (3) C (4) D

*****

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education Higher Education and Vocational Education

33 | T | II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) උපකාරක තක්සේරුව - 2026
கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர) உதவி மதிப்பீடு - 2026
General Certificate of Education (Ord. Level) Supportive Assessment - 2026

வரலாறு	II
ඉතිහාසය	II
History	II

மூன்று மணித்தியாலம்
පැය තුනයි
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි.
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time – 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

- பகுதி – I இல் முதலாம் வினா கட்டாயமானது.
- பகுதி – IIஇல் **நான்கு** வினாக்களுக்கும், பகுதி IIIஇல் **ஒரு** வினாவிற்கும் விடையளிக்குக.
- எல்லாமாக **ஆறு** வினாக்களுக்கு விடையளிக்குக.

1.(அ)

(i) கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.
யான் ஓயா, களு கங்கை, யோத வாவி, மாதுறுஓயா நீரத்தேக்கம், குருநாகல், களனி, கொடவாய, லங்கா பட்டுண, இப்பன்கட்டுவ, கதிர்காமம், கதுருகொட விகாரை, மகியங்கணை
(12 புள்ளிகள்)

(ii) கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள பகுதி உலகப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.
போலந்து, ஈஜியன் கடல், சீயம், ஆப்கானிஸ்தான், மும்பாய், புளோரன்ஸ் (6 புள்ளிகள்)

(ஆ)

(i) கீழே ABCD எனத் தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A. கால்வாய் அமைக்கும் பணிகளில் ஈடுபட்ட அதிகாரி பண்டைய கல்வெட்டுகளில் எப்பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளார்?

B. கண்டி இராச்சிய காலத்தில் பிரதானிகளின் கட்டளைகளை, செய்திகளை பிராந்திய அதிகாரிகளுக்குக் கொண்டுசென்றவர்கள் எப்பெயரில் அழைக்கப்பட்டனர்?

C. கல்வி கற்ற இலங்கையராக முதன்முதலில் சட்டவாக்கக் கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டவர் யார்?

D. ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் முதல் ஜனாதிபதி யார்? (4 புள்ளிகள்)

- A , B என்பவற்றில் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து, கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை வினா இலக்க ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

(ii)

1. படம் Aஇல் காட்டப்பட்டுள்ளது யாது?
2. இது எந்நதிக்குக் குறுக்காக அமைக்கப்பட்டுள்ளது?
3. இது காணப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க நகரம் எது?
4. இந்நிர்மாணத்தினூடாக வெளிப்படும் தொழினுட்பம் யாது?

(4 புள்ளிகள்)



A

(iii)

1. படம் Bஇல் காட்டப்பட்டுள்ள நபர் யார்?
2. இவர் எந்நாட்டின் ஆட்சியாளராவார்?
3. இவருடைய கையொப்பத்துடன் இலங்கைக்கு அனுப்பப்பட்ட கடிதம் எது?
4. இக்கடிதம் அனுப்பப்பட்ட போது இலங்கையிலிருந்த ஒல்லாந்து ஆளுநர் யார்?

(4 புள்ளிகள்)



B

பகுதி II

2. (i) இலங்கை பற்றிய தகவல்களைக் குறிப்பிடும் தென்னிந்திய இலக்கிய மூலாதாரங்கள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

(ii) எழுதப்பட்டுள்ள கருங்கல்லின் அமைப்பிற்கேற்ப கல்வெட்டுகளின் வகைகள் நான்கினைக் குறிப்பிடுக (4 புள்ளிகள்)

(iii) வரலாற்றைக் கற்கும் போது இலக்கிய மூலாதாரங்களின் பயன்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) தொல்பொருள்களைப் பாதுகாக்கவேண்டியதன் முக்கியத்துவத்தை மூன்று உதாரணங்களூடாக விளக்குக. (6 புள்ளிகள்)

3. (i) வரலாற்றுக்கு முற்பட்டக்கால மனிதன் கல்லாயுதங்களைப் பயன்படுத்தி மேற்கொண்ட செயற்பாடுகள் மூன்றினைக் குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

(ii) வரலாற்றுக்கு முற்பட்டக்கால மனிதன் வசிப்பிடங்களைத் தெரிவுசெய்கையில் கவனத்தில்கொண்ட விடயங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

(iii) முன் வரலாற்றுக்கால மயான வகைகளுள் இரண்டினைக் குறிப்பிட்டு உதாரணங்களூடாக விளக்குக.

(5 புள்ளிகள்)

(iv) ஆரம்ப வரலாற்றுக்கால குடியிருப்புகளின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

4. (i) பண்டைய காலத்தில் இந்நாட்டில் வைத்தியசாலைகளை அமைத்த மன்னர்கள் மூவரைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

(ii) பண்டைய மக்கள் சேனையொன்றை தயார்படுத்துகையில் பின்பற்றிய படிமுறைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) பண்டைய இலங்கையில் சட்டங்களும் சம்பிரதாயங்களும் நடைமுறைப்படுத்தப்பட்ட விதத்தைக் கீழே தரப்பட்டுள்ள இரு துறைகளை அடிப்படையாகக்கொண்டு உதாரணங்களூடாக விளக்குக.

A. வர்த்தகம்
B. சூழல் (5 புள்ளிகள்)

(iiv) பண்டைய சமூகத்தில் பெண்களுக்கு உயரிய அந்தஸ்து வழங்கப்பட்டிருந்தமையை மூன்று காரணிகளூடாக விளக்குக.

(6 புள்ளிகள்)

5. (i) முதலாம் நகரமயமாக்கலுக்கு உட்பட்ட ஆட்சி மத்திய நிலையங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) பொலன்னறுவை இராச்சியம் வீழ்ச்சியடைந்ததன் பின்னர் தோற்றம் பெற்ற நிர்வாக மத்திய நிலையங்களின் ஆட்சியாளர்களைக் கீழே தரப்பட்டுள்ள அடைப்புக்குள்ளிருந்து தெரிந்து எழுதுக.

A. யாப்பகூவ
B. தம்பதெனிய
C. மினிப்பே கந்தெனிய
D. கோவிந்தமலை

(சங்க தளபதி, சுப தளபதி, போசத் விஜயபாகு, புவனேகபாகு ஆதிபாதன், வன்னி விஜயபாகு)

(4 புள்ளிகள்)

(iii) ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் பணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) இரண்டாம் நகராக்கக் காலப்பகுதியில் பொருளாதாரம் ஒழுங்கமைந்திருத்த விதத்தினை மூன்று காரணிகளூடாக விளக்குக. (6 புள்ளிகள்)

6. (i) இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொண்ட பிரித்தானிய ஆளுநர்கள் மூவரைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

(ii) மியூரன் குழுவின் பரிந்துரைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) பிரித்தானியரது வருகையால் எமது நாட்டில் ஏற்பட்ட சமூக மாற்றங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) பிரித்தானியரது ஆட்சியின் விளைவாக இலங்கைக்குக் கிடைத்த அனுகூலங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

(6 புள்ளிகள்)

7. (i) இலங்கையில் சுதந்திரத்திற்கு முன்னர் தோற்றம்பெற்ற அரசியல் கட்சிகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) 1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் அடிப்படைப் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக (4 புள்ளிகள்)

(iii) 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட வாக்களிப்பு முறைகளுள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) சுதந்திரத்தின் பின்னரான அபிவிருத்திச் செயற்பாடுகளின் போது கைத்தொழில் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

பகுதி III

8. (i) ஐரோப்பிய மறுமலர்ச்சிக் காலத்தில் இலக்கியத் துறைக்குப் பணியாற்றிய எழுத்தாளர்கள் மூவரைக் குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

(ii) கீழே A தொடக்கம் D வரை தரப்பட்டுள்ள மறுமலர்ச்சிக்காலக் கண்டுபிடிப்புகளை மேற்கொண்ட நபர்களை ஒழுங்குமுறையில் எழுதுக.

A. தொலைநோக்கி
B. புவியீர்ப்புக் கோட்பாடு
C. குருதிச் சுற்றோட்டம்
D. அச்சியந்திரம் (4 புள்ளிகள்)

(iii) மறுமலர்ச்சியின் விளைவாக உலகமயமாதலில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) மறுமலர்ச்சியின் விளைவாக இலங்கையின் பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

(6 புள்ளிகள்)

9. (i) கைத்தொழிற் புரட்சிக் காலத்தில் நெசவுக் கைத்தொழிலின் முன்னேற்றத்துக்கு உதவிய புதிய கண்டுபிடிப்புகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) நிலக்கரிக் கைத்தொழிலின் போது சுரங்கத் தொழிலாளர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

(iii) கைத்தொழிற் புரட்சிக் காலப்பகுதியில் தொடர்பாடல் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியை இரு உதாரணங்களூடாக விளக்குக. . (5 புள்ளிகள்)

(iv) கைத்தொழிற் புரட்சியின் விளைவாக உலக அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

ඉතිහාසය	II
வரலாறு	II
History	II

1 . (අ) (i)
1 . (அ) (i)
1 . (a) (i)

විභාග අංකය
சுட்டெண்
Index No ..... }



1 . (ඇ) (ii)
1 . (அ) (ii)
1 . (a) (ii)



අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා
වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education,Higher Education and vocational Education

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) උපකාරක තක්සේරුව - 2026

கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர) உதவி மதிப்பீடு - 2026

General Certificate of Education (Ord. Level) Supportive Assessment - 2026

වරලාරු

History - ඉතිහාසය

உதவி மதிப்பீடு	-	விடைப் பத்திரம்
උපකාරක තක්සේරුව	-	**පිළිතුරු පත්‍රය**
Supportive Assessment	-	Answer sheet



අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
ජාතික භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව
கல்வி. உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) උපකාරක තක්සේරුව - 2026

கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர) உதவி மதிப்பீடு - 2026

General Certificate of Education (Ord. Level) Supportive Assessment - 2026

வரலாறு

புள்ளி வழங்கும் திட்டம்

வரலாறு I 01 X 40 = 40 புள்ளிகள்

வரலாறு II

பகுதி I

1ஆம் வினா கட்டாயமானது

அ. பகுதி =18 புள்ளிகள்

ஆ. பகுதி =12 புள்ளிகள் = 30 புள்ளிகள்

பகுதி II

வினா இலக்கம் 2 = 18 புள்ளிகள்

வினா இலக்கம் 3 = 18 புள்ளிகள்

வினா இலக்கம் 4 = 18 புள்ளிகள்

வினா இலக்கம் 5 = 18 புள்ளிகள்

வினா இலக்கம் 6 = 18 புள்ளிகள்

வினா இலக்கம் 7 = 18 புள்ளிகள்

ஏதாவது 4 வினாக்களுக்கு 4 X 18 = 72 புள்ளிகள்

பகுதி III

வினா இலக்கம் 8 = 18 புள்ளிகள்

வினா இலக்கம் 9 = 18 புள்ளிகள்

ஏதாவது ஒரு வினாவிற்கு 1 X 18 = 18 புள்ளிகள்

120 புள்ளிகள்

இறுதிப் புள்ளி

வரலாறு I + வரலாறு II = 100 புள்ளிகள்

40 புள்ளிகள் + 120 புள்ளிகள் / 2

60 புள்ளிகள்

வரலாறு I

வினா இல.	விடை இல.	வினா இல.	விடை இல	வினா இல.	விடை இல	வினா இல.	விடை இல
01	3	**11**	2	**21**	2	**31**	4
02	2	**12**	1	**22**	3	**32**	2
03	4	**13**	2	**23**	3	**33**	3
04	1	**14**	1	**24**	1	**34**	1
05	3	**15**	3	**25**	1	**35**	2
06	2	**16**	4	**26**	2	**36**	4
07	3	**17**	4	**27**	1	**37**	1
08	1	**18**	3	**28**	3	**38**	2
09	2	**19**	2	**29**	4	**39**	1
10	4	**20**	4	**30**	3	**40**	3

01 X 40 = 40 புள்ளிகள்

1. (அ) (I)



01 X 12 = 12 புள்ளிகள்

(ii)



01 X 06 = 06 புள்ளிகள்

01 (ஆ) i.

A. அடிக
B. கடுபுள்ளே
C. சேர் பொன்னம்பலம் இராமநாதன்
D. ஜோர்ஜ் வொசிங்டன் (1 X 4 = 4 புள்ளிகள்)

ii 1. கற்பாலம்
2. மல்வத்து ஓயா
3. அனுராதபுரம்
4. பாலம் அமைக்கும் தொழிநுட்பம்

(1 X 4 = 4 புள்ளிகள்)

iii 1. ஐந்தாம் வில்லியம் / ஐந்தாம் ஒரேஞ் வில்லியம்
2. ஒல்லாந்து
3. கியூ கடிதம்
4. பன் எங்கல் பெக்

(1 X 4 = 4 புள்ளிகள்)

பகுதி - ii

02 i. சிலப்பதிகாரம், மணிமேகலை, பதிற்றுப்பத்து (1 X 3 = 3 புள்ளிகள்)

ii. குகைக் கல்வெட்டு, குன்றுக் கல்வெட்டு / பாறைக் கல்வெட்டு, தூண் கல்வெட்டு, சுவர் கல்வெட்டு. இருக்கைக் கல்வெட்டு

(1 X 4 = 4 புள்ளிகள்)

iii.

- வரலாற்றுக் காலங்களை ஒழுங்குபடுத்திக் கொள்ளல்
- வெவ்வேறு காலகட்டங்களின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார நடவடிக்கை பற்றிய தகவல்களை அறிந்துகொள்ளல்.
- ஒரு நூலில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை இன்னொரு நூலின்மூலம் உறுதிப்படுத்தல்.
- நாடொன்றின் வெளிநாட்டு உறவுகளை பற்றி அறியலாம்.

(காரணிக்கு 2 புள்ளிகள் + விளக்கத்துக்கு 3 புள்ளிகள் = 5 புள்ளிகள்)

iv.

- தேசிய தனித்துவத்தை உறுதிப்படுத்தல்.
- எதிர்கால சந்ததியினருக்கு கையளித்தல்.
- சுற்றுலாத்துறையை விருத்திசெய்தல்.

(காரணிக்கு 3 புள்ளிகள் + விளக்கத்துக்கு 3 புள்ளிகள் = 6 புள்ளிகள்)

03 i. வேட்டையாடுதல், வெட்டுதல், கிழித்தல், நசித்தல், தோண்டுதல் (1 X 3 = 3 புள்ளிகள்)

ii.

- உணவை பெற்றுக் கொள்ளும் வசதி
- இயற்கை வளங்கள் நிறைந்த பிரதேசம்
- நீர்வசதி உள்ள பிரதேசம்
- கல்லாயுதங்கள் செய்வதற்கான பாறை வகைகள் உள்ள பிரதேசம்
- கற்குகைகளாக இருத்தல்
- வெட்டவெளிகளாக இருத்தல்

(2 X 2 = 4 புள்ளிகள்)

iii.

- கல்லறை மயானம் - தம்புள்ள இப்பன்கடுவ, யாப்பகூவ கல்சொஹொன் மயானம், கலேவள யடிகல் பொத்த
- களிமண் ஓடக்கல்லறை மயானம் - பெரகல, ஹல்துமுல்ல, ரஞ்சாமடம
- பரணி மயானம்

(இவை பற்றி உதாரணங்களுடன் விளக்கியிருத்தல் வேண்டும்.)

(காரணிக்கு 2 புள்ளிகள் + விளக்கத்துக்கு 3 புள்ளிகள் = 5 புள்ளிகள்)

iv.

- வருடாந்த மழைவீழ்ச்சி
- மண்ணின் தன்மை
- தரைத்தோற்ற வேறுபாடு
- இயற்கை வளங்களின் பரம்பல்
- நீரோடைகளின் அமைவு

(காரணிக்கு 3 புள்ளிகள் + விளக்கத்துக்கு 3 புள்ளிகள் = 6 புள்ளிகள்)

04 i. முதலாம் உபதிஸ்ஸன், நான்காம் காசியப்பன், துட்டகைமுனு, புத்ததாசன், பண்டுகாபயன் (1 X 3 = 3 புள்ளிகள்)

ii.

- பொருத்தமான காட்டுப் பகுதியை தெரிவு செய்தல்.
- காட்டை அழித்தல்
- சத்தமிட்டு ஒலியெழுப்பி விலங்குகளை விரட்டுதல்
- தீயிட்டுக் கொழுத்துதல்
- கம்பு வேலி அமைத்தல் (2 X 2 = 4 புள்ளிகள்)

iii. A வர்த்தகம்

(ஹோப்பிட்டிகம கல்வெட்டினூடாக விளக்குதல் வேண்டும்)

B சூழல்

(சூழல் பற்றிய சட்டங்களுடாக விளக்குதல் வேண்டும்)

- மண், நீர் மரங்கள், விலங்கு தொடர்பான சட்டங்கள்
- உதாரணம் - கொண்டவட்டவான் கல்வெட்டு, அநுராதபுர வெஸ்ஸகிரிய கல்வெட்டு
- நான்காம் மகிந்தன் மிகிந்தலை சுவர் கல்வெட்டு
- புத்தன்னேஹெல கல்வெட்டு

(காரணிக்கு 2 புள்ளிகள் + விளக்கத்துக்கு 3 புள்ளிகள் = 5 புள்ளிகள்)

iv.

- ஆட்சி நிரவாகத்தில் பங்குபற்றியமை (லீலாவதி, சூலசீவலிதேவி)
- பிராந்திய நிர்வாகத்தில் பங்குபற்றியமை (பருமகலு சுமனா)
- சமையற் கலையில் சிறந்து விளங்கியமை (மதுபாச்சிகா)
- சொத்துரிமை (தல்தா லஷ்மி)
- அழகுக் கலையில் சிறந்து விளங்கியமை
- தாய்மையை உயர்வாக மதித்தமை. (விகாரமகாதேவி)

(காரணிக்கு 3 புள்ளிகள் + விளக்கத்துக்கு 3 புள்ளிகள் = 6 புள்ளிகள்)

05 i. மாகம, அநுராதபுரம், பொலன்னருவை (1 X 3 = 3 புள்ளிகள்)

ii. A – சுப தளபதி
B – வன்னி விஜயபாகு
C – சங்க தளபதி
D – புவனேகபாகு ஆதிபாதன் (1 X 4 = 4 புள்ளிகள்)

iii.

- வன்னியை வெற்றிகொண்டமை
- யாழ்ப்பாணத்தை வெற்றிகொண்டமை
- மலைநாட்டில் ஜோதியவின் கிளர்ச்சியை அடக்கியமை
- இலக்கிய பணி
- பிரிவெனாக்களை அமைத்தமை
- இலங்கையை இறுதியாக ஐக்கியப்படுத்தியமை

(காரணிக்கு 2 புள்ளிகள் + விளக்கத்துக்கு 3 புள்ளிகள் = 5 புள்ளிகள்)

iv.

- பாரிய குளங்கள் அமைக்காமை
- மழைநீரை நம்பி விவசாயம் செய்தல்
- சேனைப்பயிர்ச்செய்கை
- நெற் செய்கை
- ஏற்றுமதி இறக்குமதி பொருளாதாரம்
- வெளிநாட்டு வர்த்தகம் (சீனா, எகிப்து, பாரசீகம், உரோம்)
- துறைமுகங்கள் வளர்ச்சியடைந்தமை

(காரணிக்கு 3 புள்ளிகள் + விளக்கத்துக்கு 3 புள்ளிகள் = 6 புள்ளிகள்)

06 i. பிரட்ரிக் நோர்த், தோமஸ் மெயிட்லன்ட், ரொபட் பிரௌன்றிக் (1 X 3 = 3 புள்ளிகள்)

ii.

- தென்னை வரி நீக்கப்பட வேண்டும்
- வரி வசூலிக்க உள்நாட்டு அதிகாரிகள் நியமிக்க வேண்டும்.
- ஒல்லாந்து நீதிமன்ற முறையை நடைமுறைப்படுத்த வேண்டும்.
- வரி வசூலிப்பதற்கும், நீதி வழங்குவதற்கும் தனியான அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும்

(2 X 2 = 4 புள்ளிகள்)

iii.

- மத்திய தர வர்க்கத்தினரின் தோற்றம்
- தொழிலாளர் வகுப்பினரின் தோற்றம்
- தொழிற்சங்க போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டமை
- பல்வேறு தொழிற்துறையினர் சமூகத்தில் இணைந்து கொண்டமை

(காரணிக்கு 2 புள்ளிகள் + விளக்கத்துக்கு 3 புள்ளிகள் = 5 புள்ளிகள்)

iv.

- ஆங்கில மொழி அறிமுகம்
- ஏற்றுமதிப் பயிர்கள் அறிமுகம்
- கைத்தொழில் புரட்சியின் செல்வாக்கு கிடைக்கப் பெற்றமை
- போக்குவரத்து, தொடர்பாடல் துறை வளர்ச்சி
- பாராளுமன்ற ஆட்சிமுறை கிடைத்தமை

(காரணிக்கு 3 புள்ளிகள் + விளக்கத்துக்கு 3 புள்ளிகள் = 6 புள்ளிகள்)

07 i. லங்கா சமசமாஜ கட்சி, கொம்யூனிஸ்ட் கட்சி, போல்சவிக் லெனின் கட்சி, ஐக்கிய தேசிய கட்சி (1 X 3 = 3 புள்ளிகள்)

ii.

- லங்கா, ஸ்ரீ லங்கா என அழைக்கப்பட்டமை.
- பிரித்தானிய பேரரசுடன் கொண்டிருந்த அரசியல் யாப்பு ரீதியான தொடர்புகளை முடிவுக்கு கொண்டுவந்தமை.
- இலங்கையை ஒன்றுபட்ட குடியரசாக்குதல்
- மனித உரிமைகளை பாதுகாத்தல்

(2 X 2 = 4 புள்ளிகள்)

Past Papers Wiki

iii.

- ஜனாதிபதி தேர்தல்
- விகிதாசார தேர்தல்
- பொதுசன அபிப்பிராயத் தேர்தல்

(காரணிக்கு 2 புள்ளிகள் + விளக்கத்துக்கு 3 புள்ளிகள் = 5 புள்ளிகள்)

iv.

- அரசாங்கம் கைத்தொழில் துறையில் முதலீடு செய்தல்
- கைத்தொழிலாளர்களுக்கு வசதிகளை வழங்குதல்
- பாரிய கைத்தொழில்களுக்கு மானியங்கள் வழங்குதல்
- ஏற்றுமதி, இறக்குமதி கொள்கையொன்றை நடைமுறைப்படுத்தியமை
- ஏற்றுமதி, தனியார் கைத்தொழில் துறையை ஊக்குவித்தமை

(காரணிக்கு 3 புள்ளிகள் + விளக்கத்துக்கு 3 புள்ளிகள் = 6 புள்ளிகள்)

பகுதி III

08 i. தாந்தே, பெட்ராக், பொக்காசியோ, தோமஸ் மூர், பிரான்சிஸ் பேகன், இராஸ்மஸ், வில்லியம் சேக்ஸ்பியர்

(1 X 3 = 3 புள்ளிகள்)

ii. A – கலிலியோ கலிலி
B – ஐசக் நியுட்டன்
C – வில்லியம் ஹார்வே
D – ஜோஹன்னஸ் கூடன் பேர்க் (1 X 4 = 4 புள்ளிகள்)

iii.

- குடியேற்றவாதம் பரவியமை
- ஐரோப்பிய சிந்தனை, இலக்கியம் ஏனைய நாடுகளுக்கு பரவியமை.
- ஐரோப்பியரது சமயங்கள் பரவியமை.
- ஐரோப்பிய கட்டட, செதுக்கற் கலைகள் பரவியமை
- ஐரோப்பிய தொழிநுட்ப, விஞ்ஞான அறிவு பரவியமை

(காரணிக்கு 2 புள்ளிகள் + விளக்கத்துக்கு 3 புள்ளிகள் = 5 புள்ளிகள்)

iv.

- பெருந்தோட்ட பயிர்ச்செய்கை ஆரம்பம்
- நகரங்கள் தோற்றம் பெற்றமை.
- ஏற்றுமதி, இறக்குமதி பொருளாதாரம் தோற்றம் பெற்றமை
- நிதி, வங்கி நடவடிக்கைகள் தோற்றம் பெற்றமை.
- பணப்புழக்கம் அதிகரித்தமை
- போக்குவரத்துத்துறை வளர்ச்சியடைந்தமை

(காரணிக்கு 3 புள்ளிகள் + விளக்கத்துக்கு 3 புள்ளிகள் = 6 புள்ளிகள்)

09 i. பறக்கும் நூனாழி, ஜெனி இயந்திரம், நீர்ச் சட்டகம், மியுல் இயந்திரம், நீராவியால் இயங்கும் மியுல் இயந்திரம் (1 X 3 = 3 புள்ளிகள்)

ii.

- அகழ்வின்போது நீரை வெளியேற்றுதல்
- விஷவாயு உருவாதல்
- சுரங்கத்தில் வெப்பநிலை அதிகரித்தல்
- சுரங்கத்தினுள் வெளிச்சத்தினை ஏற்படுத்துதல்

(2 X 2 = 4 புள்ளிகள்)

iii.

○

தொலைக்காட்சி கண்டுபிடிக்கப்பட்டமை

- ○ தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டமை
- ○ வானொலி கண்டுபிடிக்கப்பட்டமை
- ○ பெனி தபால், தந்தி முறை

(காரணிக்கு 2 புள்ளிகள் + விளக்கத்துக்கு 3 புள்ளிகள் = 5 புள்ளிகள்)

iv.

- புதிய குடியேற்றவாதம் பரவியமை
- பொதுவுடைமைவாதம், தாராண்மைவாதம் தோற்றம் பெற்றமை
- அரசின் தலையிடாக் கொள்கை பரவியமை
- முதலாளி, தொழிலாளி வர்க்க பேதம் ஏற்பட்டமை.
- தொழிலாளர் உரிமைப் போராட்டங்கள்
- பராளுமன்ற ஆட்சி முறை பரவியமை

(காரணிக்கு 3 புள்ளிகள் + விளக்கத்துக்கு 3 புள்ளிகள் = 6 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank